# உ. வே. சாமிநாதையரும்
# பத்தொன்பதாம்
# நூற்றாண்டுத் தமிழறிஞர்களும்

## தொகுதி – III







பதிப்பாசிரியர்கள்

**முனைவர் க. முருகேசன்**

**முனைவர் சு. குமரன்**

**முனைவர் வ. மகேஸ்வரன்**

# உ.வே. சாமிநாதையரும் பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழறிஞர்களும்

**(பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்கம்)**


பதிப்பாசிரியர்கள் : **முனைவர் க. முருகேசன்**
**முனைவர் சு. குமரன்**
**முனைவர் வ. மகேஸ்வரன்**

பதிப்புரிமை : பதிப்பாசிரியர்கள்

முதற்பதிப்பு : நவம்பர், 2016

வெளியீடு : **தமிழ்த்துறை**
**கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி**
கோயம்புத்தூர் - 641029.

கணினி : பிரடாக் பிரிண்ட், கோயம்புத்தூர் - 29.

அச்சாக்கம் : பிரடாக் பிரிண்ட்,
476 பூமாதேவி கோவில் அருகில்
கவுண்டர் மில்ஸ் (அஞ்சல்)
கோயம்புத்தூர் - 29.
அலைபேசி : 98432 73994, 91505 91017

பக்கங்கள் :

விலை : உரூ. 350/-

**ISBN : 978 - 93 - 85267 - 11 - 6**


# International Conference on U.V. Swaminatha Iyer and Tamil Scholars of the 19th Century


Editor's : **Dr. K. Murugesan. Dr. S. Kumaran**
**Dr. V. Mageshwaran**

Copyright's : Editors

First Edition : November, 2016

Published : **Department of Tamil**
**Kongunadu Arts and Science College**
Coimbatore - 641 029.

Computer : **Prdag Print**, Coimbatore - 29.

Printing at : **Prdag Print**
476, Near Boomadevi Kovil
G.N. Mills (Po), Coimbatore - 29.
Cell : 98432 73994, 91505 91017

Pages :

Prize : **Rs. 350/-**

233. **பேராசிரியர் கிருஷ்ணபிள்ளை விசாகரூபன்** *1127*
ஈழத்துத் தமிழ்க்கல்வி மரபும் நாவலரும்

234. **ஞா. செல்வகணபதி** *1134*
பாம்பன் சுவாமிகள் பாடல்களில் முருகன் வழிபாடு

235. **பேராசிரியர் கலாநிதி எஸ். சிவலிங்கராஜா** *1139*
சுன்னாகம் அ.குமாரசுவாமிப் புலவர்

236. **பெருமாள் சரவணகுமார்** *1148*
மலையகச் சமூகப் பின்புலத்தில்
கோ. நடேசய்யரின் வகிபாகம்

237. **முனைவர் ந. வேலுமணி** *1153*
மாயூரம் வேதநாயகம்பிள்ளையின் புனைகதை
முயற்சியும் சுகுணசுந்தரியும்

238. **ஆர். மகேஸ்வரன்** *1159*
சைமன் காசிச்செட்டி - தமிழ் புலவர் சரிதத்தின் முன்னோடி

239. **தி. கோ. பாபு** *1164*
உ.வே.சா.வின் உரைநடைத் தமிழ்

240. **கலாநிதி க. இரகுபரன்** *1166*
'நாவலர் பிரபந்தத் திரட்டு' ஊடாக ஆறுமுக
நாவலரை விளங்கிக் கொள்ளல்

241. **K. Kaviyarasu** 1176
Loss of Innocence and Education in Dickens' *Great Expectations*

242. **முனைவர் க. பழனிவேல்** *1180*
தென்னாட்டுத் தமிழ்த்திலகம் ரா. இராகவையங்கார்

243. **த. பால் வின்சென்ட்** *1184*
தமிழுக்குத் தொண்டு செய்த பெருமகனார்
டாக்டர் ஜி.யு.போப் *(1820 - 1908)*

244. **வா. காருண்யா** *1189*
கா. சுப்பிரமணியப்பிள்ளையின் திருவாசக
உரைத்திறன் (திருச்சாழல்)

245. **முனைவர் ஆ. சரவணன்** *1192*
மா. இராசமாணிக்கனாரின் மொழி ஆளுமை

246. **முனைவர் கு. முத்துக்குமார்** *1196*
உ.வே.சா.வின் பெருங்கதைப் பதிப்புப் பயணம் -
சாமிநாதத்தை முன் வைத்து

247. **சி. நித்யா** *1203*
பாரதியார் பாடல்களில் சமுதாய விழுமியங்கள்

# 246. உ.வே.சா.வின் பெருங்கதைப் பதிப்புப் பயணம் - சாமிநாதத்தை முன் வைத்து

**முனைவர் கு. முத்துக்குமா**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்து
கொங்குநாடு கலை அறிவியல் கல்லூ
கோயம்புத்தூர் - 641

தமிழிலக்கிய நெடும்பரப்பில் தமிழ் மொழிக்கும், தமிழருக்கு ஆன தொன்மையை, வரலாற்றை உலகிற்கு வெளிச்சமிட்டு காட்டியவர்களில் முதன்மையானவர்கள் சி.வை.தா., உ.வே.சா ஆகியோர் ஆவர். தமிழருடைய வரலாறு என்பது இலக்கியங்களிலிருந்துதான் மீட்டெடுக்கப்பட்டது. ஆனால் தற்போது அகழாய்வுகள், கல்வெட்டுகள், செப்பேடுகள், புழங்கு பொருட்கள் மூலம் உலகம் முழுவதும் பரவிக் கிடந்த நாகரிகங்களில் தமிழ் நாகரிகம் தொன்மையானது என்பது உறுதிப்பட்டுக் கொண்டிருக்கும் இக்காலத்தில் அதற்கு மூலமாக இருந்து செயலாற்றிய உ.வே.சா அவர்களின் பதிப்புப் பணியும், ஆய்வுப்பணியும் உலக இலக்கிய உள்ளளவும் நிலைத்து நிற்கக் கூடியன. தேடுதலில் தேடி அடைந்த இலக்கியங்களில் ஆராய்ச்சிப் பணியும், பாட வேறுபாடுகளைக் கண்டறிந்து களைவதுமான ஓய்வில்லா உழைப்பும்தான் செவ்விலக்கியங்களாகவும், செம்மொழியாகவும் உலக இலக்கிய வரலாற்றில் தமிழ் இடம் பெற ஏதுவாகியுள்ளது. உ.வே.சா. தேடித் தேடிப் பதிப்பித்த இலக்கியங்களுக்கு அவர் எழுதிய முன்னுரைகளையும், ஆய்வுரைகளையும், பதிப்புரைகளையும் அவர் தேடியதற்கு இணையாகத் தேடித் தொகுத்து அதற்குப் பதிப்புரை, முன்னுரை, ஆய்வுரை எழுதி 'சாமிநாதம்' என்ற களஞ்சியத்தை வெளியிட்ட ப. சரவணன் பணி தமிழிலக்கிய வரலாற்றுக்கு ஒரு மைல் கல். உ.வே.சா. பதிப்பித்த சங்க இலக்கியங்கள், காப்பியங்கள், இலக்கணங்கள், தலபுராணங்கள், சிற்றிலக்கியங்களோடு, அவர் எழுதிய பதினெண்கீழ்க்கணக்கு நூல்களின் முன்னுரைகளை, ஆய்வுரைகளை, பதிப்பரைகளை வரிசைப்படுத்தி ஒருங்கே நோக்குங்கால் இவ்விலக்கியக் கால இடைவெளியில் ஏற்பட்ட சமூகத் தாக்கங்களையும் இலக்கிய வளர்ச்சிகளையும் உணர முடியும். காப்பியங்கள் வரிசையில் உ.வே.சா., நான்காவது காப்பியமாகப் பதிப்பித்த பெருங்கதைப் பதிப்பு வரலாற்றை இக்கட்டுரை அணுகுகிறது.

### சாமிநாதம்

தமிழ் மொழிக்கு வளம் சேர்த்த இலக்கியங்களைத் தேடிப் பதிப்பித்தவர்களில் முக்கிய ஆளுமைகள் சி.வை.